நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# தமிழ் 4



திரைகடலோடினும் தீந்தமிழ் பேணுதும்

# பாடம் 1

அன்று சனிக்கிழமை.

அதிகாலை நேரம். குருவி இனங்கள் கூடிப் பாடின. பொழுது விடிகிறது என்ற குதூகலத்தில், அவை உதயகீதம் பாடின.

தூக்கம் கலைந்து வாணி கண்விழித்தாள். தூக்கம் கலைந்துவிட்டது. எனினும் அவள் கட்டிலைவிட்டு எழுந்து செல்லவில்லை.குருவிகளின் உதயகீதம் அவளுக்குப் பிடித்த ஒன்று. அதனால் அதை ரசித்தபடி அவள் கட்டிலிலே படுத்திருந்தாள். அவள் மனசிலேபல எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

இடையிடையே 'மக்பை' ஒன்றின் உரத்த 'கக்வா' என்ற அலறல். அது என்றுமே அவளுக்குப் பிடிக்காத சத்தம். மக்பையும் அவளுக்குப் பிடிக்காத பறவை. உலரவிடும் சிறுதுணிகளை அது திருடிச் செல்லும். சிறிய குருவி இனங்களை அது விரட்டித் துரத்தும். ஏன், மனிதரைக்கூட அது கொத்தித் துரத்தும். இவ்வாறு 'மக்பை' பற்றி அவள் ஏதேதோ குற்றங் குறை எல்லாம் கூறுவதுண்டு.

கட்டிலில் படுத்திருந்த வாணி, சிறிது நேரத்தில் எழுந்தாள். யன்னல் அருகே சென்றாள். யன்னல் ஊடாக வெளியே பார்த்தவாறு நின்றாள்.



கிழக்குத் திசையில் அடிவான் வெளுத்தது. அது இளஞ்சிவப்பு நிறமாக இருந்தது. அதற்குச் சற்று மேலே, நீலவானம். அதிலே வெண் முகிற் கூட்டங்கள். அவை சிதறி மெதுவாக அசைந்து சென்றன. நீலவானில் அவை அமைத்த கோலங்கள் பல.

பாயும் குதிரை, பறக்கும் பருந்து, படுத்திருக்கும் முதலை, அசைந்து ஆடிச் செல்லுகிற ஆமை, துள்ளி ஓடுகின்ற மான், தொங்கும் குரங்கு இப்படி எத்தனை எத்தனை கோலங்கள். இவற்றை எல்லாம் பார்த்து வாணி தன்னை மறந்து நிற்கையில்...

## பாடம் 14

தமிழ்நாடு தமிழரின் பரம்பரைப் பிரதேசம். அங்கு தமிழ்மொழி, தமிழர் கலாசாரம், தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள் எல்லாம் அன்று மட்டும் அல்ல, இன்றும் வளர்கின்றன. அவை எல்லாம் தமிழரின் முன்னோர் அளித்த அரும் பெரும் செல்வங்கள்.

தமிழரின் அன்றாட வாழ்விலே, அவர்களின் தனித்துவத்தை நாம் காணலாம். உணவு, உடை, கலைகள் போன்றவை சில. இவை மட்டுமல்ல: பேணும் விழுமியங்கள், வாழ்க்கைமுறை, விழாக்கள், திருமணமுறை, மரணச்சடங்கு போன்ற இன்னும் பலவும் தனித்துவ மானவை.

அறிஞரைப் போற்றுதல் தமிழர் பண்பு. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது 'வள்ளுவர் கோட்டம்.' அது சென்னையில் உள்ள ஒரு நினைவுமண்டபம்.

திருவள்ளுவர் வணங்கத் தகுந்த பெரியார். தேரிலே வள்ளுவர் அமர்ந் திருப்பது போன்ற சிலை ஒன்று வள்ளுவர் கோட்டத்தில் உண்டு. வள்ளுவர் கோட்டத்திலே, தூண்கள் எல்லாம் கருங்கல்லால் ஆனவை. நன்றாக மினுக்கியதால், அவை பளபளவென்று ஒளிர்கின்றன. தூண் களிலே 1330 குறள்களும் பொறிக்கப்பட்டுள்ளன.



கன்னியாகுமரி

சிறந்த அறிஞர்களை மதிக்கும் பண்பை கன்னியாகுமரியில் இன்னொரு நினைவு மண்டபத்திலே காணலாம். கடலுள்ளே ஒரு கற்பாறை. அதிலே ஒரு நினைவு மண்டபம். அது உலகப் புகழ் பெற்ற சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம். அந்தக் கற்பாறையில் அமர்ந்துதான் அவர் தியானம் செய்தார் என்பர்.



## விந்தை அறிந்திடு!

பஞ்சு காற்றிற் பறப்பானேன்?
பனங்காய் நிலத்தில் விழுவானேன்?
பிஞ்சு மாங்காய் புளிப்பானேன்?
பிறகு கனிந்து சுவைப்பானேன்?

கல்லு நீருள் அமிழ்வானேன்?
கப்பல் மட்டும் மிதப்பானேன்?
புல்லு மழையில் தளிர்ப்பானேன்?
பூக்கள் மலர்ந்து சிரிப்பானேன்?

பந்தை உருட்ட உருள்வானேன்?
பாறை அசையாது இருப்பானேன்?
விந்தை பலவும் நிகழ்வானேன்?
விரும்பி நாங்கள் படிப்பானேன்?

விரும்பி நாங்கள் படிப்பதற்கே
விந்தை பலவும் நிகழ்கிறதாம்!
கரும்பைத் தின்னப் பிடிக்காதோ?
கற்றுக் கொள்ளத் துடிக்காயோ?

– **கவிஞர் மஹாகவி**